1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உடல் ஊனமுற்ற எல்லோருக்கும் செயற்கை உறுப்புகள் பொருத்த முடியாது. சிலருக்குத்தான் பொருத்த முடியும். அந்த உதவியை இப்போது நம்முடைய மருத்துவ மனைகளில்கூட செய்கிருர்கள். மேற்கொண்டு "ப்ரொப் போசல்" ஏதாவது வருமானல் அதுபற்றி பரிசீலனைச் செய்யப்படும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : உடல் ஊனமுற்றவர்கள் பட்டதாரிகளாக இருந்தால், வேலை தேடி தருவதில் அரசாங்கம் தனிக் கவனம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உடல் ஊனமுற்ற எல்லோருக்கும் உதவி செய்ய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. பட்டதாரிகளாக இருந்தால் தனிக் கவனம் செலுத்தப்படும்.

திரு. சு. துரைசாமி : உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசாங்கத்தில் இப்போது வேலை வாய்ப்பு உதவி செய்யப்படவில்லை என்று சொன்னுர்கள். இனிமேலாவது அந்த வாய்ப்பு கொடுக்கப்படுமா ? குமாஸ்தா போன்ற வேலைகளில் உடல் ஊனமுற்றவர்கள் அமர்த்தப் படுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த எந்த இடங்களில் வேலை வாய்ப்பு கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் கொடுக்க முயற்சி செய்கிருேம். முழுமையாக கொடுக்க முடியாது. அவர்களுக்கு பண உதவி செய்வதைப்பற்றி பரிசீலனை செய்து, உதவி செய்வதற்கு உடல் ஊனமுற்ருேர் நல வாரியத்திற்கு உரிமை கொடுத்திருக்கிருேம். தனியார் துறைகளில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. வாய்ப்புள்ள இடங்களில் அரசாங்கத் துறைகளிலும் அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முயற்சி செய்யப்படும்.

குட்டை அமைப்புத் திட்டங்கள்

* 32 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் சித்திவிநயகர் கோவிலுக்கு அருகிலும் சீரங்கம்பாளையம் தாண்டாக்கவுண்டன்புதூருக்கு அருகிலும் குட்டைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : அமைச்சரவர்கள் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். இப்போது இல்லாவிட்டாலும்கூட, இனிமேலாவது அதை பரிசீலனை செய்து, எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, சித்திவினாயகர் கோவிலுக்கு அருகில் காளிபாளையம் கிராமம் சர்வே எண் 303-ல் ஒரு குட்டை அமைப்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டதில், தெளிவான ஓடைப்போக்கு இல்லை என்றும், வடிநீர் பரப்பளவு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது என்றும், அக்குட்டை பட்டா நிலங்களிலே அமைக்கப்பட வேண்டியிருப்பதால், நிலம் கையகப் படுத்துவதில் ரூ. 15,000 செலவாகும் என்றும் தெரிவதால் அங்கே குட்டை அமைப்பது சாத்தியமில்லை.

தாண்டாகவுண்டனூருக்கு அருகில் ஒரு குட்டை அமைப்பது குறித்து, பரிசீலிக்கப்பட்டு, 1,67,000 ரூபாய் செலவில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, சில விளக்கங்கள் பெறுவதற்காக வருவாய்த்துறை வாரியம் மேற்பார்வைப் பொறியாளருக்கு அனுப்பியிருக்கிறது. பதில் வந்தவுடன் அதில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* 33 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் S. F. No. 278 தொட்டிபாளையம் கிராமத்தில் குட்டை அமைக்கும் வேலை எப்போது துவக்கப்படும் ?

(இ) மேற்படி வேலை முடிவு பெற எவ்வளவு நாட்கள் ஆகும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொட்டிபாளையம் கிராமத்தில் S. F. No. 278-ல் குட்டை அமைக்கும் வேலை ஒன்றும் தற்பொழுது தொடங்குவதாக இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.